# பொது அறிவிப்பு

14.9.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின்படி, பொது மக்கள் கேட்புரையானது சொல்லப்பட்ட அறிவிக்கையின்அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட தொழிற்திட்டங்கள் அனைத்திற்கும் அவசியமானதாகச் செய்யப்பட்டுள்ளபடியால்,

14.9.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின்படி மேற்படி அறிவிக்கையின் பத்தி (1)-ன் 4வது பிற்சேர்க்கையின்படி பொது மக்கள் கேட்புரையானது, மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்படுதல் வேண்டும் என்கிறபடியால்,

14.9.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையில் வேண்டுறுத்தப்பட்டுள்ளபடியால் பின்வரும் தொழிற்திட்டத்திற்காக பொது மக்கள் கேட்புணரும் கூட்டம், கீழ்க்குறிப்பிட்ட தேதியன்றும் நேரத்திலும், இடத்திலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| எண். | தொழிற்திட்டத்தின் அமைவிடம் | தேதி | நேரம் | நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | தி.ள்.இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன், சங்ககிரி டிப்போ,<br>நாரணப்பன் சாவடி, சங்ககிரி துர்க் ஆர்.எஸ்,<br>சங்ககிரி தாலுகா,<br>சேலம் மாவட்டம். | 3.12.2010 | காலை 11.00 மணிக்கு | சங்ககிரி லாரி ஓனர்ஸ் அசோசியன் மீட்டிங் உறால்,<br>சங்ககிரி தாலுகா,<br>சேலம் மாவட்டம். |

இதன் தொடர்பாக, தொழிற்திட்டத்தின் செயலாண்மை சுருக்க செயல் பின்வரும் இடங்களில் கிடைக்ககூடியவாறு வகை செய்யப்படுகிறது என்று இங்கிதனால் தெரிவிக்கப்படுகிறது.

1) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், சேலம் மாவட்டம், சேலம்–636 001.

2) மாவட்ட தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, ஐந்து ரோடு, சேலம்–636 004.

3) ஆணையாளர், சுங்ககிரி ஊராட்சி ஒன்றியம், சங்ககிரி.

4) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 76 மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை–600 032.

5) மாவட்ட சுற்றுச்சூழல் நலப்பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1/ 276 மெய்யனூர் மெயின் ரோடு, சேலம்–636 004.

6) அரசு செயலர் அலுவலகம், சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, சென்னை–600 009.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் நலப்பொறியாளரால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், இது தொடர்பாக பொது மக்களின் கருத்துகள், மதிப்புரைகள், மறுப்புரைகள் வரவேற்கப்படுகின்றன.

தொழிற்திட்டம் அமையவுள்ள இடம் இத்திட்டத்தால் இடப்பெயர்ச்சியாக வேண்டிய இடங்கள் மற்றும் இத்திட்டத்தால் பெரும்பாலும் பாதிக்கப்படுகிற இடங்களில் வாழும் உண்மையான குடிமக்கள், சுற்றுச்சூழல் குழுக்கள் மற்றும் பிறர் உள்ளடங்கலாக அனைவரும் பொது மக்கள் கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்று மேற்கண்ட தொழிற்திட்டங்களைப் பற்றி அவர்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ எழுத்து வடிவிலோ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் நலப்பொறியாளரிடம் அளிக்கலாம்.

மாவட்ட சுற்றுச்சூழல் நலப்பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
1/276 மெய்யனூர் மெயின் ரோடு,
சேலம்–636 004, தமிழ்நாடு.

# இந்தியன் ஆயில் கார்போரேஷன் சங்கரி டிப்போ, சுற்றுபுற சூழல் திட்டத்தின் செயலாற்ற தொகுப்பு குறிப்பேடு

இபி & ஐ கன்சல்டன்ஸ், சென்னை
செயல் இயக்கம்,
மெட்டாமார்பிஸிஸ்
பெங்களூர்

# இந்தியன் ஆயில் கார்போரேஷன் சங்கரி டிப்போ, சுற்றுபுற சூழல் திட்டத்தின் செயலாற்ற தொகுப்பு குறிப்பேடு

1.0 முன்னுரை

இந்தியன் ஆயில் கார்போரேஷன் லிமிடெட், சங்கரி டிப்போ, சேலம், 1991-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இத் தொழிற்சாலையில் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், மண்ணெண்ணெய், ஐ ஸ்பீடு டீசல், குழாய் வழியாக வந்து அடைகிறது. அஃதே இல்லாமல் இரயில்வே வேகன்கள் மூலமாகவும் வந்து அடைகின்றது. இங்கு பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் அதற்கு ஒதுக்கப்பட்ட டாங்கிகளில் நிரப்பப்படுகின்றது. உபயோகிப்போர் தேவைக்கேற்றப்படி மண்ணெண்ணெய் போக்குவரத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட டாங்க் லாரிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படுகின்றது. இந்த டிப்போ 6 மாவட்டங்களின் பெட்ரோசிய பொருட்களின் தேவையை பூர்த்தி செய்கின்றன. அதாவது சேலம், நாமக்கல், கரூர், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு.

புதிய கூடுதல் டாங்கிகள் மற்றும் அதன் வசதிகளும் இன்றைய பெட்ரோல் பொருட்கள் சந்தையின் தேவையையும் மற்றும் பாதுகாப்பு படைப்பின் (அ) இராணுவத்தின் ஏவியேஸன் டர்பன் எண்ணெய் (ATF) தேவையையும் பூர்த்தி செய்கின்றன.

இந்த டிப்போ பின்வரும் டாங்கிகளும் அதனை அடுத்த மற்ற பேஸிலிட்டிஸ் உள்ளது. வளர்ச்சியின் காரணத்தாலும் ஏற்படும் தேவைக்கு ஏற்ப அதிக டாங்கிகள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அஃதே இல்லாமல் விமான போக்குவரத்து எண்ணெயும் இங்கு தருவித்து இங்கிருந்து சுற்றுப்புறத்திலுள்ள விமான நிலையங்களுக்கும், ஆகாய இராணுவ தேவையை பூர்த்தி செய்ய மூன்று டாங்க்கிகளும் ஒரு லாரி நிரப்பல் இடமும் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு டிப்போவின் லே-அவுட் வரைபடம் இணைத்துக் கொள்ளவும்.

1.1 சங்கரி டிப்போவில் இப்பொழுது உள்ள டாங்கிகளின் விவரங்களும் அதன் புதிய விரிவாக்குதலுக்கான விவரங்களும் கீழே உள்ள அட்டவணையில் உள்ளது.

**Table 2.2**

**Details of the Existing Tanks**

| S.NO | PRODUCT | Class A/B/C | NO.OF TANKS | EACH CAPACITY (KLs) | TOTAL CAPACITY (KLs) |
|---|---|---|---|---|---|
| 1. | MS | **A** | **2** | 936 | 1872 |
| 2. | MS | **A** | **2** | 7389 | 14778 |
| | ***Subtotal of Class A*** | | | | ***16, 650 KL*** |
| 3. | SKO | **B** | **2** | 3055 | 6110 |
| 4. | HSD | **B** | **3** | 3055 | 9165 |
| 5. | HSD | **B** | **2** | 5303 | 10606 |
| | ***Subtotal of Class B*** | | | | ***25, 881 KL*** |
| 6. | ETHANOL | - | 2 | 70 | 140 |
| 7. | TRANSMIX | - | 1 | 20 | 20 |
| | **Total** | - | **14** | - | **42,691 KL** |

**Table 2.3**

**Details of the Proposed Tanks**

| S.NO | PRODUCT | Class A/B/C | NO.OF TANKS | EACH CAPACITY (KLs) | TOTAL CAPACITY (KLs) |
|---|---|---|---|---|---|
| 1. | HSD | **B** | **2** | 5406 | 10812 |
| 2. | ATF | **B** | **3** | 3754 | 11262 |
| 3. | MS | **A** | **1** | 302 | 302 |
| | **Total** | - | **6** | - | **22,376 KL** |

## செயல்முறை விளக்கம் (விவரிப்பு):-

1. குழாய் மூலமாக கிளாஸ் A (பெட்ரோல்) மற்றும் கிளாஸ் B (HSD, SKO, ATF) சென்னை சுத்திகரிப்பு ஆலையிலிருந்து குழாய் மூலமாக வந்து அடைதல்.

2. அடைந்த பெட்ரோலியப் பொருளை அதற்காக குறிப்பிடப்பட்ட டாங்கிகளில் வைக்கப்படுகிறது.

3. தேவைக்கேற்றவாறு லாரிகளின் மூலம் நிரப்பி அனுப்புதல்.

**FLOW CHART FOR STORAGE TERMINAL FLOW DIAGRAM**

**RECEIPT OF FINISHED PETROLEUM**
**PRODUCTS FROM CPCL**



# அமைப்பிடத்தின் சிறப்பாக்கம்

அட்டவணை எண் 2.1: சுற்றுபுற சூழ்நிலை விவரங்கள்

| குறிப்பாக | விவரங்கள் |
|---|---|
| தட்பவெட்ப நிலை (இந்திய வானிலை தகவல் படி) | வருடாந்திர அதிக சராசரி அளவு வெப்பம் 37.09 (கோடை) வருடாந்திர சராசரி குறைந்த அளவு வெப்பம் 29.03 (குளிர்காலம்) வருடாந்திர மொத்தம் மழை அளவு 851.90 |
| பணி திட்டத்திற்கு பெறப்பெற்ற நிலம் | இப்பொழுது உள்ள இடத்திலேயே இதனை அமைக்கப்படும் |
| தற்போதைய நிலத்தின் உபயோகம் | தொழிற்சாலை |
| அருகிலுள்ள விமானநிலையம் | சேலம் |
| அருகிலுள்ள இரயில் நிலையம் | சங்கரி |
| அருகிலுள்ள பிரதான நகரம் | சேலம் |
| அருகிலுள்ள நகரம் | சேலம் |
| வனப்பகுதி 10 கி.மீ. சுற்றளவு | சூரியமலை வனப்பகுதி |
| அருகிலுள்ள பிரதான சாலை | NH-47 சங்கரி, சேலம், கோயம்புத்தூரை இணைக்கின்றது |
| மலை / பள்ளத்தாக்குகள் | மலை / பள்ளத்தாக்குகள் ஏதும் இல்லை |
| பண்டைய வரலாற்று நினைவுச் சின்னங்கள். | கூறும் வகையாக ஏதும் இல்லை |
| சரித்திர முக்கிய ஸ்தலங்கள் | சரித்திர முக்கிய ஸ்தலங்கள் ஏதும் இல்லை |
| நீர் நிலைகள் | பவானி ஆறு 20 கி.மீட்டர் தொலைவில் |
| அமைவிடத்தின் சிறப்பம்சம் | நகரத்திற்கு வெகு அருகில் உள்ளது. பிரதான சாலை 47 சங்கரியை அடுத்துள்ளது. கோயம்புத்தூர் - சென்னை இரயில் பாதை சென்னை சங்கரி மூலமாக வருகிறது. |

# உள்கட்டமைப்பு வசதிகள்

1) **பெட்ரோலிய பொருட்களை அனுப்புவதற்கான வசதிகள்:**

6 பிளாட்பார்ம்கள் எண்ணைப் பொருட்களை கணணி உபகரணத்துடன் கீழிருந்து நிரப்பக் கூடிய வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

2) **எண்ணெய் குழாய் அமைப்பு:**

தனித்தனி எண்ணெய் குழாய் வெவ்வேறு பொருட்களுக்காக பொருட்கள் இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

3) **தீ அணைப்பான்:**

தீ அணைப்பான் அணிகலன்கள், OISD 117 விதிமுறைகள் படி அமைக்கப்பட்டுள்ளது. இது இல்லாமல் கையால் ஏந்தக்கூடிய / சக்கரங்கள் பொருத்தப்பட்ட தீ அணைப்பான்கள் போதிய அளவு டிப்போவின் எல்லா இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளது.

4) **பாதுகாப்பு நடவடிக்கைகள்:-**

1. டிப்போவின் வடிவமைப்பு தமிழ் நாடு மாசுக் கட்டுபாட்டின் தேவைக்கேற்றவாறு அமைந்துள்ளது.
2. டிப்போவை சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் அதன் தேவைக்கு ஏற்றவாறு பசுமைப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.
3. டிப்போவின் பாதுகாப்பு PESO/OISD இவைகளின் தேவையை உட்கொண்டு அவ்விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

5) **தேவையான நீர்:**

700$m^3$/day கிலோ தண்ணீர் ஒரு நாளுடைய தேவை.

6) **தேவையான மின்சாரம்:**

| எண். | வழி | தேவை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மின்சார வாரியம் | 3.9 மெகா வாட் |
| 2. | மின் உற்பத்தி அணிகலன் | 160 KVA (2 Nos.) |

மின் தடை ஏற்படும் நேரங்களில் மட்டும் மின் உற்பத்தி அணிகலன் உபயோகிக்கப்படும்.

7) **உறுப்பினர்கள், தொழிலாளர்கள் எண்ணிகை:**

இந்த டிப்போவில் தேவையான நபர்கள் மொத்தம் --------- இதில் -------- நபர்கள் தற்காலிக ஊழியர்கள். ------------- நபர்கள் தொழிலாளர்கள். ---------- நபர்கள் தொழில் நுட்ப தொழிலாளர்கள்.

8) **தேவையான நிலம்:**

இந்த புதிய கட்டமைப்புக்கு புதியதாக நிலம் தேவை இல்லை. இப்பொழுது இருக்கும் நிலத்திலேயே புதிய கட்டுமானங்கள் செய்யப்படும்.

9) **போதைய சுற்றுப்புறச் சூழல்**

சுற்றுப்புறச் சூழல் மேலாக்க திட்டமானது பலவகையான சுற்றுப்புறச் சூழலை ஒன்றிய காற்று, நீர், ஒலி, நிலம் ஆகியவற்றைக் கொண்டு அமைகிறது.

(i) காற்று, மாசு கட்டுப்பாடு முறைகள்

(ii) இத்தொழிற்சாலையின் அனைத்து செயல்களும் மூடப்பட்ட அமைப்புக்குள் அதாவது குழாய் மூலமாக ஏற்றுதல், இறக்குதல் செய்யப்படுகிறது. அதனால் பெட்ரோலிய வாயு வெளிவர வாய்ப்பு மிகமிகக் குறைவு.

(iii) பெட்ரோல் போன்ற எண்ணெய் பொருட்களை, மிதக்கும் கூரை அமைந்த டாங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளது. அதனால் வியாகக்கூடிய வாய்ப்பு குறைவு.

(iv) மின் உற்பத்தி அணிகலன்களுக்கு, மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் வரையறையப்படி புகைப்போக்கி அமைக்கப்பட்டுள்ளது. இதில் குறைந்த சல்பர் உள்ள டீசல் உபயோகிக்கப்படும். மேலும் இந்த மின் உற்பத்தி அணிகலன், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்த வரும் மின்சாரம் செயலிழப்பு நேரிடும் போது மட்டுமே உபயோகப்படுகின்றன.

10) **நீர் மாசுக்கட்டுப்பாடு:**

இந்த டிப்போவில் உற்பத்தி செய்யப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதால் இத்தொழிற்சாலையில் வேறு எந்த உற்பத்தியும் செய்யப்படவில்லை. தொடர்ந்து உற்பத்தி செய்யாத காரணத்தினால் தொடர்ந்து மாசு வருவதில்லை. உற்பத்தி இங்கு இல்லாததால் நீர் தேவை மனித உபயோகத்திற்கும், இட சுத்திகரிப்புக்கு மட்டுமே தேவைப்படுகின்றது. ஆகவே மேற்சொன்ன காரணத்தினால் தண்ணீரின் தேவை மிகக்குறைவாக உள்ளது.

11) மழை நீருக்காக தனியாக மழை நீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

12) கழிவுநீர் எண்ணெய் / தண்ணீர் சுத்திகரிப்பு உபகரணம் மூலம் சுத்தம் செய்யப்பட்டு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கட்டுப்பாடுக்குள் எண்ணெய் அளவு இருந்தால் மட்டுமே அந்த தண்ணீரை தோட்டங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

13) **ஒலி மாசுக்கட்டுப்பாடு:**

இத்தொழிற்சாலையில் அமைக்கப்பட்ட அனைத்து இயந்திரங்களும், சான்றிதழ் பெற்ற உபகரணங்களாக அமையும். மேலும் அனைத்து உபகரணங்களும் சீராக பராமரிக்கப்பட்டு தேவையற்ற ஒலிநிலைகளை களையப்படும்.

14) **சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு:**

இத்தொழிற்சாலையின் விரிவாக்கத்தின் போது ஏற்படும் பாதிப்புகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

1) கட்டுமான பணியின் போது ஏற்படும் விளைவுகள்

2) செயல் முறையின் போது ஏற்படும் விளைவுகள்

கட்டுமான பணியின் போது ஏற்படும் விளைவுகள் மிகவும் குறைவாக உள்ளது. இந்த குறைந்த அளவினை தவிர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(a) கட்டுமானப்பணி டாங்கிகளின் அடிமனையும்

(b) புதிய லாரி, பிளாட்பார்ம் இவை இரண்டுமே மிக மிக மிகக் குறைவாக உள்ளது.

(c) இரும்பு டாங்கிகள் அமைத்தல், இணைத்தல், பொருத்துதல் மட்டுமே ஆகிய இக்காரணத்தினால் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் வெகு குறைவு.

**செயல் முறையின் போது ஏற்படும் விளைவுகள்**

(1) குழாயின் மூலம் எண்ணெய் பெறுதல்

(2) குழாயின் மூலம் வந்த எண்ணெயை டாங்கிகளில் சேகரித்து வைத்தல்.

(3) சேகரித்து வைத்த எண்ணெயை குழாய் மூலம் லாரிகளில் ஏற்றுதல்

(4) தேவையான அளவு, தேவையான பொருளை, தேவையான மக்களிடம் அடைய வைத்தல். மேற்கூறிய 4 காரணங்களிலும் மாசு ஏற்பட வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவாக உள்ளது.

15) **ஒலி மாசு படுதல்:**

ஒலியின் அளவு ஒரு குறிப்பிட்ட அளவை விட அதிகரிக்கும் போது மனிதனின் காதுகேக்கும் சக்தி குறைந்து விடுகிறது. டீசல் ஜெனரேட்டர் இயக்குவதன் மூலம், வாகனம் போக்குவரத்தாலும் ஒலி மாசு படலாம். ஆனால் இந்த டீசல் ஜெனரேட்டரை மின்சாரத்தடையின் போது மட்டுமே உபயோகிப்பதால் ஒலியின் சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படாது என்பது தெளிவாகிறது.

16) **சுற்றுப்புற சூழ்நிலை மாசுக்கட்டுப்பாடு அமைப்பு:**

(1) **காற்று மாசு கட்டுப்பாடு அமைப்பு:**

தற்போதைய காற்றுத்தன்மை, இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நியமித்துள்ள வரம்பிற்கு உட்பட்டு உள்ளது.

(2) **தண்ணீர் சூழ்நிலை:**

தண்ணீர் சூழ்நிலையும் காற்றுச் சூழ்நிலையைப் போல முக்கியமான ஒன்றாகும். தண்ணீர் உபயோகத்திலிருந்து ஒரு நாளில் 7 மீட்டர் க்யூப் கழிவு நீரானது கழிவு நீர் சுத்திகரிக்கும் தொட்டிக்கு அனுப்படவுள்ளது.

தண்ணீர் சூழ்நிலையை பாதுகாப்பதற்கு மேற்கண்ட வழிமுறைகளை கையாளுவதால் தண்ணீர் மாசுபடுவது தவிர்க்கப்படுகிறது.

(3) **ஒலி சூழ்நிலை:**

தற்போதுள்ள ஒலியின் அளவு இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனத்திற்குள்ளும் சுற்றியுள்ள பகுதிகளிலும் நியமிக்கப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. பொதுவாக ஒலி மாசுப்படுதலைத் தவிர்ப்பதற்கு மூன்று விதமான தடுப்பு வழிமுறைகளை கையாளலாம்.

(1) தற்காப்பு சாதனங்களை உபயோகப்படுத்துவதன் மூலமும்

(2) பொறியியல் சார்ந்த வழிமுறைகளை உபயோகிப்பதன் மூலமும்

(3) அட்மினிஸ்ட்ரேட்டிவ் வழிமுறைகளை கையாளுவதன் மூலம் ஒலி மாசுபடுவதைத் தவிர்க்கலாம்.

(4) பொறியியல் சார்ந்த வழிமுறையே சிறந்ததாக கூறப்படுகிறது. எனினும்

(i) ஒலி மாசுபடுவதை தவிர்ப்பதற்கு எல்லா இயந்திரங்களையும் நல்ல முறையில் பராமரிக்கப்படவுள்ளது.

(ii) இயந்திரங்களில் ஒலிக்குறைப்பான் பொருத்துவதன் மூலம் ஒலி மாசுபடுதலை தவிர்க்கலாம்.

(iii) அதிர்வு இயந்திரங்களின் ஒலியைக் கட்டுப்படுத்துவற்கு ஒலி உறிஞ்சும் அட்டைகள் பயன்படுத்தப்படுகிறது.

(iv) ஒலி இல்லாத இடம் என்று அறிவிக்கப்படவுள்ளது.

(v) மரம் நடுவதன் மூலமும் காடுகளை வளர்ப்பதன் மூலம், ஒலி மாசுபடுதலைத் தவிர்க்கலாம்.

(vi) ஒலி அதிர்வுகளின் இடையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கேட்புத்திறனை பரிசோதிக்கப்படுகிறது.

இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனம் ஒலி மாசுபடுவதைத் தவிர்ப்பதற்கு மேற்கண்ட வழி முறைகளை கையாண்டு வருவதால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பது தெளிவாகிறது.

17) **திடக்கழிவுகள்:**

உற்பத்தியில் வரும் திட நிலை கழிவுகள் சேகரித்து தனிப்படுத்தப்பட்டு சென்னை சுத்திகரிப்பு ஆலைக்கு அனுப்பப்படும்.

18) பாதுகாப்பு சுற்றுப்புற சூழ்நிலை:

இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு அந்தந்த துறை நிர்வாகிகளும் மற்றும் மேற்பார்வையாளர்களும் பொறுப்பு வகிக்கிறார்கள்.

அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, காலணிகள், பாதுகாப்பு கண்ணாடிகள், தலைகவசம், கையுறைகள், காதுறைகள் ஆகியவை வழங்கப்படும். பாதுகாப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினைகள் பற்றி ஆராயவும், அறிவதற்கு பாதுகாப்பது தணிக்கை நடத்தப்படுகிறது. அவ்வப்போது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. அவ்வப்போது ஏற்படும் விபத்துக்களும் முறையாக குறிக்கப்பட்டு, விபத்துகள் மறுபடியும் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். மேற்கண்ட பாதுகாப்பு நடவடிக்கை இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனம் கையாளுவதால் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் திட்டத்தால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பது தெளிவாகிறது.

19) பசுமை பகுதி அமைத்தல்

தோட்டங்களையும் அதிகமான மரங்களை நடுவதன் மூலம் காற்றில் உள்ள துகள்கள், வெப்பம் மற்றும் அமில வாயுக்களைக் கட்டுப்படுத்த முடிகிறது. இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனம் அதிகமாக தோட்டங்களை நல்ல முறையில் பராமரிப்பதன் மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாக்கப்படுகிறது.

20) சுற்றுப்புறச் சூழ்நிலை மேலாக்கத்திட்டம்:-

இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனம் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாப்பதற்காக மாசுக்கட்டுப்பாட்டு வழிமுறைகளை செம்மையாக கடைபிடித்து வருவதால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு எந்தவிதமான எதிர்மறை விளைவும் இல்லை என்பது தெளிவாகிறது.

21) பசுமைபகுதி பராமரிப்பு:-

நிறுவனத்தைச் சுற்றி அதிகமாக மரங்களை நடுவதன் மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசிலிருந்து பாதுகாக்க முடிகிறது. இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ நிறுவனத்தின் தோட்டப்பராமரிப்பின் முக்கிய நோக்கம்.

1. வெளிவரும் வாயுக்கழிவினால் ஏற்படும் விளைவை தவிப்பதற்கு
2. ஒலி அதிர்வை மட்டுப்படுத்துவதற்காகவும்.

இவ்விதமாக இந்தியன் ஆயில் கார்போரேஷன் சங்கரி டிப்போ நிறுவனம் தோட்டங்களை பராமரிப்பதன் மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்த உள்ளது.

22) பின் விளைகளை எதிர்நோக்கும் திட்டம்:-

உற்பத்தி திறனால் ஏற்படும் விளைகளை அறிய அவ்வப்போது மாசுக் காரணிகளின் அளவுகளை சோதித்தறியப்படுகிறது.

23) காற்றுத்தன்மை:-

காற்றின் தன்மையை வருடத்திற்கு ஒரு முறையாவது அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அளவிடப்படுகிறது.

24) ஒலி:-

இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் ஒலி அளவு அதிகரிக்கிறது. வெவ்வேறு இடங்களின் ஒலியின் அளவை ஒலி அளவை அளவிடும் உபகரணத்தைக் கொண்டும் அளவிடப்படுகிறது.

25) தண்ணீர் தன்மை:-

நிலத்தடி தண்ணீரின் தன்மை அவ்வபோது அறியப்படுகிறது.

26) மழை நீர் சேகரிப்பு (RWH) :-

இந்தியன் ஆயில் சங்கரி டிப்போவில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

27) **மண்ணின் தன்மை மற்றும் திடக்கழிவு:-**

தோட்டத்திலுள்ள மண்ணை அவ்வபோது பரிசோதனைச் செய்யப்படுகிறது. ஒன்று அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறையாவது பரிசோதிக்கப்படுகிறது.

28) **சுற்றுப்புறச் சூழ்நிலை மேலாக்கக்குழு:-**

சுற்றுப்புறச் சூழ்நிலை மேலாக்கக்குழு, சுற்றுப்புறச் சூழ்நிலை சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகளை கவனிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு சுற்றுப்புறச் சூழ்நிலையை தகுந்த முறையில் பராமரிக்கப்பதற்கும், மாசுக் கட்டுப்பாட்டு இயந்திரங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கும், மாசுக் கட்டுபாட்டு வாரியத்தில் உள்ள பொறியியல் வல்லுநர்களுடன் தொடர்பு கொள்ளும் பொறுப்பு வகிக்கிறார்கள்.

29) **சுற்றுப்புறச் சூழ்நிலை மேலாக்கக் குழுவின் வேலைகள்:-**

சுற்றுப்புறச் சூழல் நிர்வாகமானது கீழ்கண்ட பொறுப்புகளை கையாள்கிறது.

1. மாசுகாரணிகளை குறைத்து தூய்மையாக வைக்க உதவுகிறது.
2. பசுமை சூழலை நன்றாக மேம்படுத்த உதவுகிறது.
3. தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கு மாசுகாரணிகள் மற்றும் மாசுகாரணிகள் விளைவை பற்றியும் விழிப்புணர்வை உண்டாக்குகிறது.
4. காற்று, தண்ணீர் மற்றும் கேடு விளைவிக்கும் கழிவுகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நியமிக்கப்பட்ட வரம்பிற்குள்ளேயே கொண்டு வரச்செய்கிறது.
5. ஒவ்வொரு வருடமும் சுற்றுப்புறச் சூழலின் செய்திகள் பற்றி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்படுகிறது.

முடிவுரை

இந்தியன் ஆயில் சங்கரி டிப்போ இங்கு இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இப்பொழுது பெட்ரோல் பொருட்கள் தேவை அதிகரித்த காரணத்தினாலும், விமான பெட்ரோலியப் பொருள் சென்னையிலிருந்து தென் மாநாடுகளுக்கு அடைவதற்கு அதிகமான நேரம், பொருள், தரம் கெடுவதற்கு வாய்ப்புள்ளதாலும் விமானப்படையினரின் அதிக அவசிய தேவை நிறைவேற்றுவதற்காகவும், இப்பொழுதுள்ள இடத்திலேயே டாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், (1) சுய தேவை பூர்த்தி, (2) தரமான எண்ணெய் பொருள் கிடைத்தல், (3) குழாய் மூலம் வருவதால் அனாவசியமான செலவினங்களை தவிர்த்தல். (4) லாரிகளின் போக்குவரத்தினால் ஏற்படும் சுற்றுப்புற மாசுக்கட்டுபாடு தவிர்த்தல், (5) அதிக அளவு லாரிகள் இப்போதுள்ள சாலையை உபயோகிப்பதால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் தவிர்த்தல், (6) புதிய கட்டமைப்பிற்கு நில ஆர்ஜிதமோ புதிய சாலை இரயில் போக்குவரத்தோ, வனங்களை அழித்தலோ, குடியிருப்புகள் அகற்ற வேண்டிய தேவையில்லை, (7) இந்தியன் ஆயில் கார்போரேஷன் சங்கரி டிப்போ அதன் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவிதமான கேடும் விளைவிக்கவில்லை, (8) இத் தொழிற்சாலையினால் உண்டாகும் மிகக் குறைந்த விளைவுகளை சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் மூலமாக குறைக்கப்படுகிறது.

மேற்படி இந்தியன் ஆயில் கார்போரேஷன் சங்கரி டிப்போ நிறுவனம் பல விதமான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தினை கொண்டு செயல்பட இருப்பதால் அனுமதி அளிப்பதற்கு தங்களை பணிவன்புடன் கோருகிறோம்.